# DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Proceedure)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 94/2021
Miscellaneous :
Sessions : PW 4
Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் குவிமுச 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | முருகவேல் |
| Husband Name | வடிவேல் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of .02.2024

**குறுக்கு விசாரணை**

1. நான் தற்போது விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். நான் 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். அசா.1 எனக்கு என்ன உறவு என்றால் எனது ஊர்காரர் ஆவார். அசா.1 சஞ்சீவி தற்போது சென்னை வேலச்சேரியில் வசித்து வருகிறார். சஞ்சீவி எத்தனை வருடமாக சென்னையில் வசித்து வருகிறார் என்றால் எனக்கு கருத்து தெரிந்த வயதில் இருந்து சென்னையில் தான் வசித்து வருகிறார். சுமார் 40 வருடங்கள் இருக்குமா என்றால் இருக்கும். மேற்படி விவரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் அசா.1 ஊருக்கு திருவிழாவில் கலந்து கொள்ள வரும்போது தெரிந்து கொண்டேன். அசா.1 ன் வீட்டிற்கு நான் அவ்வப்போது சென்று வருவேனா என்றால் இல்லை. ஒருமுறை சென்றுள்ளேன்.

2. எப்போது சென்றேன் என்றால் அவரது வீட்டின் கிரகபிரவேசத்திற்கு சென்றேன். அசா.1 ன் குடும்பத்துடன் பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. அசா.1 எனக்கு சித்தப்பா என்றால் ஊர்காரர் முறையில் சித்தப்பா ஆவார். நான் ரியல் எஸ்டேட் செய்கிறேனா என்றால் இல்லை. அசா.1 பணத்தை எதிரியிடம் கொடுத்த போது நான் உடன் இல்லை என்றால் சரிதான் அப்போது நான் வெளியூரில் இருந்தேன். அசா.1 யிடம் எதிரி பணம் கொடுத்தார் என்ற தகவலை அசா.1 என்னிடம் சொன்னார். அசா.1 21.09.2016 பணத்தை எதிரியிடம் கொடுத்ததாக என்னிடம் சொன்னார். அச்சிறுபாக்கத்தில் வைத்து பணம் கொடுத்ததாக சொன்னார். குறிப்பிட்ட இடம் எனக்கு தெரியாது.

3. ரூபாய் 10 லட்சம் கொடுத்ததாக சொன்னார். அசா.1 எதிரியிடம் எந்த பணமும் கொடுக்கவில்லை என்றாலும் எதிரி எந்த பணமும் வாங்கவில்லை என்றாலும் அசா.1 எனது சித்தப்பா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கு எதிரியை தெரியும் ஆனால் பழக்கம்

இல்லை. எதிரியின் நிலத்திற்கு அருகே எனக்கு 2 ஏக்கர் நிலம் உள்ளது என்றால் சரிதான். 2009 ம் ஆண்டு எனது தகப்பனார் எதிரியின் தகப்பனாருக்கு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்துவதாக இருந்தது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரியின் தந்தை நாராயணசாமி எனது தந்தைக்கு எதிராக மதுராந்தகம் சார்பு நீதிமன்றத்தில் சிவில் வழக்கு தொடுத்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி வழக்கு எண் அசல் வழக்கு எண் 19/2013 என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4. கடந்த 10.01.2024 மேற்படி வழக்கிற்கு எதிரிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 2013 வருடத்தில் இருந்து எனக்கும் எதிரிக்கும் நிலம் சம்மந்தமாக பிரச்சனை வரும் என்றால் இல்லை. தபசில் சொத்தை எதிரிதான் அனுபவித்து வருவதால் மேற்படி அனுபவம் சம்மந்தமாக நான் எதிரியுடன் பிரச்சனை செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என் மீதும் என் தந்தை மீதும் காஞ்சிபுரம் நில மோசடி தடுப்பு பிரிவின் கீழ் மனு கொடுத்தும் எங்களை விசாரித்தார்களா என்றால் இல்லை.

5. மேற்படி புகாரின் பேரில் நான் காவல் நிலையம் சென்று சொத்தை திருப்பி தருவதாக எழுதி கொடுத்தேன் என்றால் சரியல்ல. எனது தந்தையும் நானும் சென்னை உயர் நீதி மன்றத்தில் முன்ஜாமீனுக்கு மனு செய்தோமா என்றால் இல்லை. அப்போது சமரசம் செய்வதற்காக வழக்கறிஞர் நியமிக்கப்பட்டார் என்றால் தெரியாது. எதிரி என் மீது புகார் கொடுத்து நான் காவல் நிலையம் சென்று சொத்தை எழுதி கொடுத்து பின்பு முன்ஜாமீன் மனு செய்துள்ளேன் என்றாலும் தற்போது வழக்கிற்கு மறுக்கிறேன் என்றாலும் சரியல்ல.எதிரிக்கும் எங்களுக்கும் நீண்ட காலமாக சொத்து பிரச்சனை இருப்பதால் அவரை பழி வாங்குவதற்காக அவருக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கும் பணம் கொடுத்தல் வாங்கல் பற்றி எதுவும் தெரியாது என்றாலும் அசா.1 கேட்டுக்கொண்டதால் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் எதிரி மீது அச்சிறுபாக்கம் காவல் நிலையத்தில் பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

6. மேற்படி புகார் சம்மந்தமாக எதிரியை அழைத்து காவல் நிலையத்தில் விசாரித்தது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. எதிரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணி புரிவது பற்றி எனக்கு தெரியுமா என்றால் வழக்கறிஞர் என்று எனக்கு தெரியும். எங்கு வேலை செய்கிறார் என்பது எனக்கு தெரியாது. எதிரி மீது கொடுக்கப்பட்ட புகார்கள் அனைத்தும் முகாந்திரம் இல்லாததால் விசாரணைக்கு பிறகு முடித்து வைக்கப்பட்டது என்றால் தெரியாது.அந்த முன்விரோதத்தின் அடிப்படையில் நான் தற்போது எதிரியை பழிவாங்க வேண்டும் என்பதற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.